# கரூர் நகராட்சி
# கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2020ம் ஆண்டு மார்ச்–23ம் நாள் திங்கட்கிழமை மாலை 4.25மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற சாதாரணக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1)கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு–43ல் ஆட்சிமங்கலம் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு பட்டாளம்மன் கோவிலுக்கு மறுகும்பாபிஷேகம் செய்வதால் கோவிலுக்கு முன்புறம் மண்டபம் அமைக்க கட்டிடப் பணி மேற்கொள்ள இடையூறாக உள்ள மின்னழுத்த கம்பிகள் இடையூறு ஏற்படாதவண்ணம் மாற்றி அமைத்து தருமாறு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.606/2020/இ3 மூலம் அனுமதி கோரியதில் க.எ.2மி.பொ/இ.கா/தெ/கரூர்/கோ.தனி/ எண்.221/நாள்.17.03.2020ன்படி மின் வாரியத்திடம் இருந்து வரப்பெற்ற மதிப்பீட்டுத் தொகை ரூ.98,840/–யை செலுத்த கோரியதின்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட இடத்தில் மின்னனத்த கம்பிகள் இடையூறு ஏற்படாதவண்ணம் மாற்றி அமைக்க மின்வாரியத்திடம் இருந்து வரப்பெற்ற மதிப்பீட்டுத் தொகை ரூ.98,840/–யை நகராட்சி பொதுநிதியிலிருந்து மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றம் அங்கீகரிக்கலாம். (606/2020/இ3)

தீர்மான எண்.2083 அங்கீகரிக்கப்பட்டது.

2)கரூர் நகராட்சி பகுதிகளில் உள்ள 48 வார்டுகளிலும் 67428 குடியிருப்புகள் உள்ளன, பருவமழை காலத்தினை முன்னிட்டு டெங்கு மற்றும் கொசுக்கள் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்ட நடவடிக்கைகள் ந.க.எண்.2571/2017/ஜெ1, நாள்.23.04.2018ன் படி ஒவ்வொரு 300 குடியிருப்புகளுக்கும் ஒர கொசு ஒழிப்பு பணியாளர் வீதம் (DBC) 67428 குடியிருப்புகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி அடிப்படையில் 225 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை (DBC) தற்காலிகமாக ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்தி கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள 17.05.2016 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ரிலையான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை என்ற நிறுவத்தின் மூலம் பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.3819 நாள்.22.07.2016ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு 31.12.2017ல் ஒப்பந்த காலம் முடிவடைந்து, மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மேலும் இந்நகர்மன்ற தீர்மான எண்.1051 நாள்.27.08.2018ல்படி 01.08.2018 முதல் 31.07.2019 வரை ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்த பணியினை ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தகாலம் முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் தற்போது எதிர்வரும் வடகிழக்கு பருவமழை காலத்தில் கொசுக்கள் உற்பத்தி அதிகரித்து கொசுக்கள் மூலம் பரவும் நோயினால் பாதிப்பு அதிகரிக்கும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளதால் கொசு ஒழிப்பு பணியாளர்களின் ஒப்பந்த காலத்தினை நீட்டித்து பொது மக்களின் பொது சுகாதாரம் பாதிக்கப்படாமல் பாதுகாக்க மேலும் மேற்படி ரிலையான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தாரரே ஓராண்டு காலத்திற்கு (01.08.2019 முதல் 301.07.2020) ஒப்பந்த பணியினை ஒப்பந்த புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலைவிதத்தின் அடிப்படையில் தொடர்ந்து இரண்டாவது முறையாக நகர்மன்ற தீர்மான எண்.1708, நாள்.14.08.2019ன் படி நிட்டிப்பு செய்து ஒப்பந்ததாரருக்கு உத்திரவு வழங்கி பணியினை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்போது தமிழகத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 06.03.2020 தேதியிட்ட ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க கரூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவாமல் இருக்க அனைத்து முன்னெச்சரிக்கை மேற்கொள்ள DBC

பணியாளர்களை கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்த தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட நிறுவனம் ஒப்பந்த விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள 225 DBC பணியாளர்களை முழுமையாக சப்ளை செய்யாததால் பொது சுகாதார பணிகள் மிகவும் பாதிக்கப்பட்டு பொதுமக்களிடம் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் வகையில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதால் ரிலையான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உத்திரவினை ரத்து செய்து தற்போது 403 துாய்மை பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்து வரும் அவர்லேண்ட் இன்ஜீனியரிங் இண்டஸ்ரீஸ் ஒர்க்ஸ் பி லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய நிறுவனத்திற்கு ஒப்படைக்கும் வரை 225 DBC பணியாளர்களை 01.04.2020 முதல் சப்ளை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3)பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வரை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்ட பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (8466/2017/எச்1)

தீர்மான எண்.2084 அனுமதிக்கப்பட்டது

3)கரூர் நகராட்சி கணிணி பிரிவில் பொருத்தப்பட்டுள்ள 20KVA UPSக்கான மின்கலப்பெட்டி வருடாந்திர பராமரிப்பு பணிக்கு (AMC) 01.01.2020 முதல் 31.12.2020 வரை ரூ.1,25,000/– மதிப்பீட்டில் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | Spactra Automation, Salem | 1,21,882/– |
| 2) | Hybrid Communication, Erode | 1,31,552/– |
| 3) | Vikram Technologies, Erode | 1,36,400/– |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **Spactra Automation, Salem** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.1,21,882/–ஐ நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ3/9771/2019)

தீர்மான எண்.2085 பதிவு செய்யப்பட்டது.

4) கரூர் நகராட்சி அலுவலகத்தில் இயங்கி வரும் 16 CCTV கேமிராக்களுக்கு வருடாந்திர பராமரிப்பு (AMC) 01.01.2020 முதல் 31.12.2020 வரை ரூ.55,000/– மதிப்பீட்டில் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. |
|---|---|---|
| 1) | Spactra Automation, Salem | 54.634/– |
| 2) | Hybrid Communication, Erode | 62,304/– |
| 3) | Vikram Technologies, Erode | 60,062/– |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **Spactra Automation, Salem** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.54,634/—ஐ நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ3/9772/2019)

தீர்மான எண்.2086 பதிவு செய்யப்பட்டது.

**5)** கரூர் நகராட்சி அலுவலகத்தில் இயங்கி வரும் **16** CCTV கேமிராக்களுக்கு வயரிங் முழுவதுமாக பழுதடைந்த நிலையில் உள்ளதை Rewing செய்யும் பணிக்கு ரூ.**1,45,000/—** மதிப்பீட்டில் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் **15**ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | Spactra Automation, Salem | 1,44,550/— |
| 2) | Hybrid Communication, Erode | 1,58,120/— |
| 3) | Vikram Technologies, Erode | 1,66,085/— |

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **Spactra Automation, Salem** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.1,44,550/—ஐ நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ3/99861/2019)

தீர்மான எண்.2087 பதிவு செய்யப்பட்டது.

**6)**கரூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக TVS-132Column Dot Matrix Printer 3 எண்ணிக்கை கொள்முதல் செய்யும் பணிக்கு **ரூ.60,000/— மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. |
|---|---|---|
| 1) | Computer Park, Karur | 58,410/— |
| 2) | Unique Micro computers (Karur) PVT Ltd | 63,012/— |
| 3) | Lighten System, Karur | 63,720/— |

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **Computer Park, Karur** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.58,410/—ஐ நகராட்சி பொது நிதியில் செலவினம் மற்கொண்டதையும் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ3/9971/2019)

தீர்மான எண்.2088 பதிவு செய்யப்பட்டது.

7)கரூர் நகராட்சி உள்ளாட்சி தணிக்கை பிரிவில் அலுவலக பயன்பாட்டில் உள்ள 3 கணிணிகளின் பயன்பாட்டிற்காக புதிய 3 Nos 600 VA UPS மற்றும் LT Keyboard– 1 Nos பணிக்கு ரூ.7,000/– மதிப்பீட்டில் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. |
|---|---|---|
| 1) | Computer Park, Karur | 7000/– |
| 2) | Lighten System, Karur | 7650/– |
| 3) | Unique Micro computers (Karur) PVT Ltd | 8000/– |

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **Computer Park, Karur** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.7000/–ஐ நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ3/1313/2020)

தீர்மான எண்.2089 பதிவு செய்யப்பட்டது.

8) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 06.03.2020ந் தேதி ஆய்வு கூட்டத்தில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆய்வுக்கூட்டத்தில்அறிவுறுத்தபட்டுள்ளதற்கிணங்க கரூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 48 வார்டுகளில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்கும் பணிக்கு கிருமி நாசினி தெளிக்க தேவையான லைசால் இருப்பு மிகவும் குறைவாக உள்ளதால் தடுப்பு நடவடிக்கையினை தீவிரப்படுத்தும்பொருட்டு தற்போது 5000லிட்டர் லைசால் வாங்கி வழங்க சுகாதார ஆய்வாளர்கள் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை மேற்கொள்ளும் பணிக்கு தேவையான கிருமிநாசினியான லைசால்– 5000லிட்டர் கொள்முதல் செய்வதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.9.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.9.00லட்சத்தினை பொதுநிதி அல்லது கொரோனா வைரஸ் தடுப்பு நிவாரண நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (எச்1/1605/2020)

தீர்மான எண்.2090 அங்கீகரிக்கப்பட்டது.

9)நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 06.03.2020ந் தேதி ஆய்வு கூட்டத்தில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆய்வுக்கூட்டத்தில்அறிவுறுத்தபட்டுள்ளதற்கிணங்க கரூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 48 வார்டுகளில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு கீழ்க்கண்ட விபரப்படி பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்க சுகாதார ஆய்வாளர்கள் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

| வ.எண் | உபகரணங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வெள்ளை நிற ஒருமுறை பயன்படுத்தும் முழு உடல் உறை | 100 |

| | | |
|---|---|---|
| 2 | ஒருமுறை பயன்படுத்தும் காலுறை | 100 |
| 3 | ரப்பர் கையுறை | 100 |
| 4 | முக உறை | 100 |
| 5 | பாதுகாப்பு கண்கண்ணாடி | 100 |

எனவே கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட விதி 1920 பிரிவு–15ன்கீழ் ரூ.0.70இலட்சத்தில் கொள்முதல் செய்ய அனுமதி வழுங்கப்பட்டது.

அதனடிப்படையில் மேற்கண்ட பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு 11.03.2020ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் முன்று நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | உபகரணங்கள் | விலை விகிதம் | Karthia Enterprises, 903, TNHB Kalaivanar Nagar Abattur, Chennai-600 058 | Jai Sakthi Industries , No.2/760 Mugappair west, Chennai-600 037 | Sri Balaji Enterprises, 886, Phase-II TNHB Kalaivanar Nagar, Ayappakam, Ambattur, Chennai-600 058 |
|---|---|---|---|---|---|
| 1 | வெள்ளை நிற ஒருமுறை பயன்படுத்தும் முழு உடல் உறை | ஒன்றுக்கு | ரூ.390/– | ரூ.420/– | ரூ.450/– |
| 2 | ஒருமுறை பயன்படுத்தும் காலுறை | ஒன்றுக்கு | ரூ.20/– | ரூ.26/– | ரூ.35/– |
| 3 | ரப்பர் கையுறை | ஒன்றுக்கு | ரூ.30/– | ரூ.40/– | ரூ.100/– |
| 4 | முக உறை | ஒன்றுக்கு | ரூ.80/– | ரூ.85/– | ரூ.90/– |
| 5 | பாதுகாப்பு கண்கண்ணாடி | ஒன்றுக்கு | ரூ.80/– | ரூ.90/– | ரூ.90/– |

மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Karthia Enterprises, Chennai-600 058 நிறுவனத்தின் விலைவிபரம் உள்ளூர் மார்க்கெட் விலைவிபரத்திற்கு ஏற்ப இருப்பதால் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு மேற்கண்ட உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும் கொரனோ வைரஸ் பரவாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டதற்கான செலவினத்தொகை ரூ.64,690/– யை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதித்து பொதுநிதி அல்லது கொரோனா வைரஸ் தடுப்பு நிவாரண நிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (எச்1/1672/2020)

தீர்மான எண்.2091 பதிவு செய்யப்பட்டது.

10)கரூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுவதற்காக அதிக மக்கள்தொகை கூடும் இடங்களில் லைசால் 5% தெளித்து வைரஸ் கிருமி பரவாமல் இருக்க லைசால் 5000லிட்டர் சப்ளை செய்யும் பணிக்கு 13.03.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், 60/101,ஏ/பி.நெ.6 ஆர்.எஸ்.பில்டிங், குளக்கரை தெரு, காமராஜ் நகர், நாமக்கல் | லிட்டர் ஒன்றுக்கு | ரூ.173.60 ஜிஎஸ்டி உட்பட |
| 2. | ஸ்ரீஅத்தனுார் அம்மன் டிரேடர்ஸ், 1/34, காளப்பநாயக்கன் பட்டி, சேந்தமங்கலம், நாமக்கல் | லிட்டர் ஒன்றுக்கு | ரூ.184.84 ஜிஎஸ்டி உட்பட |

அ.கு

1)மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று சப்ளை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(எச்1/1605/2020)

தீர்மான எண்.2092 அங்கீகரிக்கப்பட்டது.

11)கரூர் நகராட்சிக்கு சொந்தமான ஆசாத் சாலையில் உள்ள நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் அலுவலகத்தின் கிழக்குப் பகுதியில் தென்வடலாக உள்ள வகுப்பறை கட்டிடம் கட்டப்பட்டு 124ஆண்டுகளுக்கு மேலாகின்றது. ஆய்வுக் கட்டிடம் 1979ம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. இவ்வகுப்பறை கட்டிடங்கள் கட்டப்பட்டு நீண்டகாலம் ஆகிவிட்டபடியால் பழுதடைந்துள்ளது. தரை தளம் Madras terrace roofing மற்றும் முதல் தளம், தரை தளம் ஓடுகளை (Tiles roof) கொண்டு கூரை அமைக்கப்பட்டுள்ளது. கட்டிடம் பழுதடைந்துள்ளதால் அந்த கட்டிடத்தில் மாணவர்களின் பாதுகாப்பு நலன் கருதி வகுப்பறைகள் ஏதும் நடைபெறுவதில்லை. ஆதலால் பயன்பாட்டில் இல்லாத வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்களை இடித்து அப்புறப்படுத்துவதற்கு தலைமை ஆசிரியர், நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கரூர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆதலால் பயன்பாட்டில் இல்லாத வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்களை இடித்து அப்புறப்படுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

கரூர் நகராட்சிக்கு சொந்தமான ஆசாத் சாலையில் உள்ள நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் அலுவலகத்தின் கிழக்குப் பகுதியில் தென்வடலாக உள்ள வகுப்பறை கட்டிடம் மற்றும் ஆய்வுக் கூடம் கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(இ1/1598/2020)

தீர்மான எண்.2093 அனுமதிக்கப்பட்டது.

12) கரூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் திடக்கழிவுகளை 213 துப்புரவு பணியாளர்களை கொண்டு அகற்றும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.22078/பி3/2016 நாள்.31.08.2016ன்படி ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று பணி மேற்கொண்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s Ourland Engineering works Pvt., Ltd., சென்னை நிறுவனத்திற்கு கரூர் நகர்மன்ற தீர்மான எண்.202 நாள்.12.05.2017ல் அனுமதி பெறப்பட்டு 30.03.2017ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் நீட்டிப்பு வழங்கி பணி நடைபெற்று வருகிறது. மேற்படி நிறுவனத்திற்கு கடந்த ஆண்டு நகர்மன்ற தீர்மான எண்.1534 நாள்.31.03.2019ன்படி அனுமதிக்கப்பட்ட பணியானது வருகிற 31.03.2020 அன்றுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் உலக அளவில் பொதுசுகாதார அவசர நிலையாக அறிவிக்கப்பட்ட நிலையில் உலக சுகாதார நிறுவனம் தற்போது இதனை உலக அளவில் நோய்

தொற்றாக அறிவித்துள்ளதால், மேற்படி பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளிகள் பெற நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலையால் காலதாமதம் ஏற்படும் என்பதால் தற்போது திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி திடக்கழிவுகளை வீடுவீடாக சென்று மக்கும் கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகள் என 100சதவிகிதம் பிரித்து வாங்கும் பணி பாதிக்கப்படும் சூழ்நிலையில் உள்ளது.

மேலும் நகர்நல அலுவலர் கரூர் நகராட்சி அவர்களின் 06.03.2020ம் தேதிய குறிப்பில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் தமிழகத்தில் கொரோனா வைரஸ் என்னும் உயிர்கொல்லி வைரஸ் தற்போது பரவும் சூழ்நிலை உள்ளதால் அனைத்து நகராட்சி பகுதிகளிலும் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கையாக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள விழப்புணர்வு ஏற்படுத்தவும், திடக்கழிவு மேலாண்மை விதி 2016ன்படி திடக்கழிவுகளை வீடுவீடாக சென்று மக்கும் கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகளை 100சதவிகிதம் பிரித்து வாங்கும் பணிகள் பாதிப்புகள் ஏற்படும் என்பதால் பொதுசுகாதாரப் பணி அத்தியாவசிய பணி என்பதாலும் பொதுமக்களின் சுகாதார நலன் கருதியும் தற்போது கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க அரசு 144 ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ளதாலும், புதிய ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணிகள் ஆரம்பிக்கும் வரை பொதுசுகாதார அவசியம் கருதி ஏற்கனவே பணியில் உள்ள M/s Ourland Engineering works Pvt., Ltd., சென்னை நிறுவனத்தினருக்கே ஏற்கனவே நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு கால நீட்டிப்பு செய்து வழங்கலாம் என குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அதன்பேரில் M/s Ourland Engineering works Pvt., Ltd., சென்னை நிறுவனத்திற்கு புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி புதிய நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணி ஆரம்பிக்கும் வரை ஏற்கனவே நடைமுறையில் உள்ள நிபந்தனைகள் மற்றும் விலை விகிதத்தின்படி பணி மேற்கொள்ள சம்மத கடிதம் கோரி இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் மூலம் சம்மதம் கோரி 09.03.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது.

மேற்படி நிறுவனம் ஏற்கனவே வழங்கியுள்ள நிபந்தனைகள் மற்றும் விலை விகிதத்தின்படி பணி மேற்கொள்ள சம்மதித்து 12.03.2020 அன்று கடிதம் வழங்கியுள்ளது. எனவே, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் அவசர அவசியத்தை கருதி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வரை தற்போது பணி மேற்கொண்டு வரும் M/s Ourland Engineering works Pvt., Ltd., சென்னை நிறுவனத்திற்கு 01.04.2020 முதல் கால நீட்டிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

1)பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வரை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3)பொதுசுகாதார பணியாளர்களின் குறித்த அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.28.06.13ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதியின்படி 213 பணியாளர்களை கொண்டு தொடர்ந்து துப்புரவு பணி மேற்கொண்டிட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்காகும் செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/9209/2016)

தீர்மான எண்.2094 அனுமதிக்கப்பட்டது.

13)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6, 7, 8, 11 மற்றும் 12வது வார்டு பகுதிகளில் உள்ள தெருக்களில் புதைவடிகால் பிரதான குழாய் அமைக்கப்படாமல் விடுபட்டு உள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு புதைவடிகால் இணைப்பு வழங்க இயலாமல் உள்ளது. நகராட்சியால் வழங்கப்பட்டு வரும் புதைவடிகால் இணைப்பு வழங்கும் பணியினை அனைத்து வீடுகளுக்கும் வழங்கும் வகையில் விடுபட்டுள்ள தெருக்களுக்கு புதைவடிகால் பிரதான குழாய் அமைக்கும் பணிக்கான மதிப்பீடு ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00இலட்சத்தை பொதுநிதியில் செலவினம் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம். (இ5/811/2020)

தீர்மான எண்.2095 அனுமதிக்கப்பட்டது.

14)கரூர் நகராட்சியில் பெரியகுளத்துப்பாளையம் மற்றும் வடக்கு பசுபதிபாளையம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குகை வழிப்பாதையில் மழைக்காலங்களில் குகைவழியின் உட்பகுதியில் சேகரமாகும் மழைநீரை வெளியேற்ற இயலாமல் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகுந்த சிரமமாக உள்ளது. எனவே, குகை வழி பாதையின் உள்ளே சேகரமாகும் மழைநீரை வெளியேற்றவும் புதைவடிகால் மனித ஆய்வுக் குழிகளில் அடைப்பு ஏற்படும் சமயங்களில் கழிவுநீரை வெளியேற்றும் வகையில் Sludge removal motor இல்லாமையால் புதைவடிகால் குழிகளில் உள்ள அடைப்புகளை நீக்க இயலாமல் உள்ளது. எனவே, பொதுமக்களின் நலன் கருதி 7.5HP Oil Engine - 1No., 5.00HP Oil Engine -1No., மற்றும் Sludge removal pump 5.00HP-2Nos., வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.20இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.20இலட்சத்தை குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். (இ5/813/2020)

தீர்மான எண்.2096 அனுமதிக்கப்பட்டது.

15)கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சி / அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை சுத்தம் செய்யும் பணிக்கு (outsourcing) 46 துப்புரவு பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள 25.07.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோர ஒப்பந்தப்புள்ளி முதலாவது அறிவிப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களின் வழியாக மார்க் மீடியா கம்யூனிகேசன்ஸ், சென்னை மூலமாக 09.07.2019 அன்று மாலைமலர் தமிழில் மற்றும் டெக்கான் கிரானிக்கல் நாளிதழ் (Deccan Chronicle) ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பர கட்டணத் தொகை ரூ.53,340/—யை விளம்பர மேலாளர் மார்க் மீடியா கம்யூனிகேசன்ஸ், சென்னை அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/5001/2019)

தீர்மான எண்.2097 அனுமதிக்கப்பட்டது.

16)கரூர் நகராட்சி அலுவலக கணிணிகள் பிரிண்டர்கள் மற்றும் ஜெராக்ஸ் மெஷின் அலுவலகப் பணிகளுக்கு தொடர்ந்து பயன்படுத்துவதினால் தொடர் பராமரிப்பு பணிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணிக்கு 31.03.2019ம் தேதியுடன் பராமரிப்பு பணி முடிவடைவதால் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வந்த Computer Park, கரூர் நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் முடிவடைவதால் வருடாந்திர பராமரிப்பு பணியினை நடப்பாண்டிற்கு 01.04.2019 முதல் 31.03.2020 வரை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரி ஒப்பந்ததாரரை நியமனம் செய்ய 2019ம் ஆண்டின் பாராளுமன்ற தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட்டு தேர்தல் நன்னடத்தை விதி அமுலில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளிகள் கோர இயலாதநிலையில் வருடாந்திர பராமரிப்பு பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டும் அலுவலகப் பணிகள் பாதிப்பு ஏற்படாவண்ணம் கணிணிகள் பராமரிப்பு பணிகளை தொடர்ந்து கவனிக்க வேண்டி கடந்தாண்டு ஒப்பந்தப்புள்ளி கோரி வரப்பெற்ற Computer Park, கரூர் எனும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி விலை விபரத்தின் அடிப்படை நடப்பாண்டிற்கும் வருடாந்திர பராமரிப்பு பணியினை மேற்கொள்ள மேற்படி ஒப்பந்ததாரர் 15.03.2019ல் விண்ணப்பம் அளித்துள்ளதால் 01.04.2019 முதல் 31.03.2020 வரை பராமரிப்பு

பணியினை மேற்கொள்ளவும். அதற்கான செலவினத்திற்கு ஒப்பந்தப்புள்ளியின் விலை விபரத்தின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7,37,200/—க்கு உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் நிர்வாக அனுமதி வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று கடந்தாண்டு ஒப்பந்தப்புள்ளி கோரி வரப்பெற்ற Computer Park, கரூர் எனும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி விலை விபரத்தின் அடிப்படையில் 01.04.2019 முதல் 31.03.2020 வரை வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள Computer Park, கரூர் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.7,37,200/—யை நகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(இ3/2020)

தீர்மான எண்.2098 பதிவு செய்யப்பட்டது.

17)கரூர் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி கட்டிடங்கள் கட்டப்பட்டு 100ஆண்டுகளுக்கு மேலாகின்றது. கரூர் நகருக்கு தனித்துவமாக விளங்கும் இப்பள்ளியின் கட்டிடங்கள் பழுதடைந்து உள்ளதால் இக்கட்டிடங்களில் வகுப்பறைகள் நடத்த இயலாமல் பூட்டப்பட்டு உள்ளது. பள்ளியில் பயிலும் மாணவர்களின் பாதுகாப்பு நலன் கருதி பழுதடைந்துள்ள கட்டிடங்களை அகற்ற வேண்டியது அவசியமாகிறது.

இந்த பள்ளியில் படித்து முடித்து தற்பொழுது உயரிய பதவிகளில் பலர் உள்ளனர். அனைவரது விருப்பத்தினையும் நிவர்த்தி செய்யும்வகையில் Rotary Club of Karur Texcity கரூர் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பழுது அடைந்து பயன்படுத்த இயலாமல் உள்ள கட்டிடங்களுக்கு பதிலாக புதிதாக 15வகுப்பறைகள், 2 ஆய்வகங்கள் மற்றும் கழிவறைகள் சுமார் ரூ.2.60கோடி மதிப்பீட்டில் சகல வசதிகளுடன் இந்நிறுவனத்தின் CSR நிதி மற்றும் பன்னாட்டு CSR நிதி மூலம் மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக 15வகுப்பறைகள், 2 ஆய்வகங்கள் மற்றும் கழிவறை வளாகக் கட்டிடங்களை Rotary Club of Karur Texcityயின் சமூக பொறுப்புணர்வு நிதி மூலம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பழுதடைந்து பயன்படுத்த இயலாமல் உள்ள பள்ளிக் கட்டிடங்களை இப்பள்ளியின் பாதுகாப்பு நலன் கருதி உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று இடித்து அப்புறப்படுத்த அனுமதிக்கலாம்.
2)புதிதாக 15 வகுப்பறைகள், 2 ஆய்வகங்கள் மற்றும் கழிவறை வளாகம் ரூ.2.60கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி பெற கருத்துரு சமர்ப்பிக்க அனுமதிக்கலாம்.
3)புதிதாக கட்டிடம் கட்டப்படுவதால் நகராட்சிக்கு ஏற்படும் நிதிச் சுமையைக் கருத்தில் கொண்டு இந்நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வு நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(இ1/1598/2020)

தீர்மான எண்.2099 அனுமதிக்கப்பட்டது.

18)கரூர் நகராட்சி பகுதியான இனாம்கரூர் மற்றும் கரூர் பகுதிகளில் (வார்டு எண்.1 முதல் 32 வரை) அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் அரசு காலணியில் ஒரு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையமும் (STP), ஒரு பிரதான கழிவு நீரேற்று நிலையமும் (Main Pumping Station), இரண்டு இடங்களில் கழிவு நீருந்து நிலையங்களும் (Lifting Pumping Station), 2.97கி.மீ நீளத்திற்கு நீரேற்றும் பிரதான குழாய்களும், 3013 பாதாள சாக்கடை ஆய்வு குழிகளும், 92.25கி.மீ நீளத்திற்கு பிரதான குழாய்களும் ஆகியவற்றினை பரரமரிப்பு பணியினை மேற்கொள்ள நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத நிலையில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளில் நகராட்சியில் நிதி சேமிப்பு ஏற்படும் நிலையை கருதியும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.69, நாள்.04.05.1999—ன்படி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தனியார் மூலம் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 3390, நாள். 20.11.2015—ன் படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை

அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.23656/2013/டிஓ1, நாள்.04.02.2016–ன்படி ரூ.98.33இலட்சத்தில் தொழில் நுட்ப ஆணை வழங்கப்பட்டுள்ளதின் அடிப்படையில் 24.02.2016ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைவிட 6.91% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M/s.PRG Construction, Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை நகர்மன்ற தீர்மான எண்.3756, நாள். 16.06.2016–ல் அனுமதியளிக்கப்பட்டு இவ்வலுவலக செயல்முறை கடித ந.க.எண்.12700/2015/இ5, நாள்.25.03.2017–ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் புதிய பணியாளர்களை பணியமர்த்தி பராமரிப்பு பணியினை மேற்கொள்வதினால் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு மேற்படி ஒப்பந்ததாரர் தொடர்ந்து இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள உத்திரவு வழங்குமாறு கோரியுள்ளதன்படி இந்நகர்மன்ற தீர்மான எண்.1365 நாள்.28.02.2019ன்படி பணிக்காலத்தை நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மூன்று ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் வரும் 2020-2021ம் ஆண்டு காலத்திற்கு பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், நீர் உந்து நிலையம், பிரதான கழிவு நீர் குழாய், மனித ஆய்வுக்குழிகள் ஆகியவற்றினை பராமரிப்பு பணியினைரூ.88.70இலட்சத்திற்கு மதிப்பீட்டில் நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி உரிய கருத்துருக்களை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1)மன்றம் அனுமதி அளிக்கலாம்

2)மேற்படி பாதாள சாக்கடை பராமரிப்பு பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.88.70 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ5/2020)

தீர்மான எண்.2100 அனுமதிக்கப்பட்டது.

19)கரூர் நகராட்சி பகுதியான இனாம்கரூர் மற்றும் கரூர் பகுதிகளில் (வார்டு எண்.1 முதல் 32 வரை) அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் அரசு காலணியில் ஒரு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையமும் (STP), ஒரு பிரதான கழிவு நீரேற்று நிலையமும் (Main Pumping Station), இரண்டு இடங்களில் கழிவு நீருந்து நிலையங்களும் (Lifting Pumping Station), 2.97கி.மீ நீளத்திற்கு நீரேற்றும் பிரதான குழாய்களும், 3013 பாதாள சாக்கடை ஆய்வு குழிகளும், 92.25கி.மீ நீளத்திற்கு பிரதான குழாய்களும் ஆகியவற்றினை பரரமரிப்பு பணியினை மேற்கொள்ள நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத நிலையில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளில் நகராட்சியில் நிதி சேமிப்பு ஏற்படும் நிலையை கருதியும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.69, நாள்.04.05.1999–ன் படி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தனியார் மூலம் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 3390, நாள். 20.11.2015–ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.23656/2013/டிஓ1, நாள்.04.02.2016–ன்படி ரூ.98.33இலட்சத்தில் தொழில் நுட்ப ஆணை வழங்கப்பட்டுள்ளதின் அடிப்படையில் 24.02.2016ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட 6.91% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M/s.PRG Construction, Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை நகர்மன்ற தீர்மான எண்.3756, நாள். 16.06.2016–ல் அனுமதியளிக்கப்பட்டு இவ்வலுவலக செயல்முறை கடித ந.க.எண்.12700/2015/இ5, நாள்.25.03.2017–ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது வந்தது.

மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலம் 31.3.2016–ல் முடிவுற்ற நிலையில் ஒப்பந்தபுள்ளி கோரி புதிய பணியாளர்களை பணியமர்த்தி பராமரிப்பு பணியினை மேற்கொள்வதாலும் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு மேற்படி ஒப்பந்ததாரர் தொடர்ந்து அடுத்த நிதியாண்டிற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள உத்திரவு வழங்குமாறு 28.3.2018–ந் தேதி கடிதத்தில் கோரியுள்ளதன்படி பாதாள சாக்கடை பராமரிப்பு பணியினை 2017–2018 வருடங்களில் பராமரிப்பு பணியினை மேற்கொண்ட M/s.PRG Construction, Karur அவர்களுக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்த விலை விகிதத்திற்கும் ஒப்பந்த விதிகளின் படி 1.4.2018 முதல் 31.3.2019 வரை ஓராண்டு காலத்திற்கும் மேலும் இந்நகர்மன்ற தீர்மான எண்.1365 நாள்.28.02.2019ன்படி 01.04.2019 முதல் 31.03.2020 ஒராண்டு காலத்திற்கு நகராட்சி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.இ5/12700/2015, நாள்.20.3.2019–ன்படி பணிக்காலத்தை நீட்டிப்பு செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது.

தற்போது **01.04.2020** முதல் **31.03.2021** வரை ஒராண்டு காலத்திற்கு பாதாள சாக்கடை பராமரிப்பு பணி மேற்கொள்ளவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பித்து அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள கால அவகாசம் ஏற்படும் காரணத்தினால் ஏற்கனவே பராமரிப்பு பணி மேற்கொள்ளும் M/s.PRG Construction, Karur என்ற நிறுவனத்திற்கு **01.04.2020** முதல் **30.06.2020** வரை **6** மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பாதாள சாக்கடை பராமரிப்பு பணிக்கு ஏற்படும் செலவுத் தொகை ரூ.**33.90** இலட்சத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

**1)**மன்றம் அனுமதி அளிக்கலாம்

**2)**மேற்படி பாதாள சாக்கடை பராமரிப்பு பணியினை **6** மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து அதற்குண்டான செலவினத் தொகை ரூ.**33.90** இலட்சத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ**5/2020**)

தீர்மான எண்.**2101** அனுமதிக்கப்பட்டது.

**20)**கரூர் நகர எல்லைக்குள் தாந்தோணி கிராமம் சர்வே எண்கள்.**572/1A1B**-ல் **22.32** செண்ட் பரப்பளவு இடத்தினை மனைகளாக பிரிக்க அனுமதி கோரி திருமதி.ச.பழனியம்மாள், க/பெ.சதாசிவம் என்பவர் நகராட்சிக்கு விண்ணப்பத்தினை தொடர்ந்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டதினை தொடர்ந்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.**1198/2019**/திம**2**, நாள்.**22.07.2019**ல் சாலை அமைப்பு வரைபடம் தயார் செய்து வரைபடத்தின்படி சாலைகள் முறையாக அமைத்து நகராட்சி வசம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மனை உரிமையாளர் தார்சாலை அமைத்துள்ளதினை இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.**1756**, நாள்.**30.09.2019**–ன்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது இடம் **9.12** சதுர மீட்டர் இடத்தினை பத்திர பதிவு எண்.**841/2020**–ல் வாயிலாக நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் கடித ந.க.எண்.**1198/2019**/திம**2**, நாள்.**03.03.2020**–ல் ம.வ/ந.ஊ.உ.இ(திம) எண்.**06/2020** என எண்ணிடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.கு:–</u>

மனைப்பிரிவில் உள்ள சாலைகள் முறையாக அமைத்து நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதால் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு மனைப்பிரிவு அனுமதி வழங்கலாம். (எப்**1/2377/2019**)

தீர்மான எண்.**2102** அனுமதிக்கப்பட்டது.

**21)**கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான COMPACTOR வாகன பதிவு எண். TN 47 AH 8849 க்கு BACK DOOR ALTERATION பணி செய்ய அவ்வாகனத்தின் அவசர அவசியம் கருதி **17.03.2020** அன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணி மனை உரிமையாளர்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்றது கீழ்க்கண்டவாறு

| Sl.No. | Name of the workshop | Amount |
|---|---|---|
| 1 | SRI BAGAYALAKSHMI MOTOR WORKS, ERODE | Rs.48,900/- |
| 2 | GAYATHRI MANIMEGALAI AUTO WORKS, ERODE | Rs.49,100/- |
| 3 | MURUGAN AUTOS ERODE | Rs.49,600/- |

மேற்படி BACK DOOR ALTERATION பணி செய்ய குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள SRI BAGAYALAKSHMI MOTOR WORKS, ERODE நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும், பட்டியல் ரூ.**48,900/–** தொகை பொதுநிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

**1)**மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான COMPACTOR வாகன பதிவு எண். TN 47 AH 8849 க்கு BACK DOOR ALTERATION பணி செய்ய குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள SRI BAGAYALAKSHMI MOTOR WORKS, ERODE நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும், பட்டியல் தொகை **ரூ.48,900/–** பொதுநிதியில் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
**3)**மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்புக்கு மேல் உள்ள கூடுதல் செலவின தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/10020/2019)

தீர்மான எண்.2103 அனுமதிக்கப்பட்டது.

**22)**கரூர் நகராட்சி பொறியியல் பிரிவிற்கு சொந்தமான ஹுண்டாய் **170**என்ற இயந்திரத்திற்கு **1500** ஹவர்ஸ்க்கு தேவையான ஹைட்ராலிக் சர்வீஸ் பணிகள் செய்ய அவ்வியந்திரத்தின் அவசர அவசியம் கருதி மதிப்பீடு தயார் செய்ய **17.03.2020** அன்று ஹுண்டாய் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் நிறுவனமான SSSH EQUIPMENTS PRIVATE LIMITED, SALEM திடம் நேரடியாக விலை விபரப் பட்டியல் பெற்றதில் அந்நிறுவனம் **ரூ.48,000/–** வழங்கியுள்ளது.

மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும், பட்டியல் தொகை **ரூ.48,000/–** பொதுநிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
இந்நகராட்சி பொறியியல் பிரிவுக்கு சொந்தமான ஹுண்டாய் **170** என்ற இயந்திரத்திற்கு அவ்வியந்திரத்தின் அவசர அவசியம் கருதி ஹுண்டாய் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் நிறுவனமான SSSH EQUIPMENTS PRIVATE LIMITED, SALEM திடம் நேரடியாக விலை விபரப் பட்டியல் ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் **ரூ.48,000/–** பொதுநிதியில் செலவினம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/1632/2019)

தீர்மான எண்.2104 அனுமதிக்கப்பட்டது.

**23)**கரூர் நகராட்சி பொறியியல் பிரிவிற்கு சொந்தமான ஹுண்டாய் **170**என்ற இயந்திரத்திற்கு **1500** ஹவர்ஸ்க்கு தேவையான இன்ஜின் சர்வீஸ் பணிகள் செய்ய அவ்வியந்திரத்தின் அவசர அவசியம் கருதி மதிப்பீடு தயார் செய்ய **17.03.2020** அன்று கிர்லாஸ்கர் ஆயில் இன்ஜின் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் நிறுவனமான BHARAT DIESELS, KARUR ரிடம் நேரடியாக விலை விபரப் பட்டியல் பெற்றதில் அந்நிறுவனம் **ரூ.7,794/–** வழங்கியுள்ளது.

மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும், பட்டியல் தொகை **ரூ.7,794/–** பொதுநிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
இந்நகராட்சி பொறியியல் பிரிவுக்கு சொந்தமான ஹுண்டாய் **170** என்ற இயந்திரத்திற்கு அவ்வியந்திரத்தின் அவசர அவசியம் கருதி கிர்லாஸ்கர் ஆயில் இன்ஜின் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் நிறுவனமான BHARAT DIESELS, KARUR ரிடம் நேரடியாக விலை விபரப் பட்டியல் பெற்று ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் **ரூ.7,794/–** பொதுநிதியில் செலவினம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/1632/2019)

தீர்மான எண்.2105 அனுமதிக்கப்பட்டது.

**24)**கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான **19** எண்ணிக்கை TATA ACE வாகன எண்கள். TN 47 AL3552, TN47 AL6770, TN47 AL6784, TN47 AL6729, TN47 AL6203, TN47 AL6711, TN47 AL3585, TN47 AL6774, TN47 AL3569, TN47 AL6783, TN47 AL6703, TN47 AL3580, TN47 AL3550, TN47 AL6793, TN47 AL3584, TN47 AL3512, TN47 AL6741, TN47 AL6739, TN47 AL6727 க்கு TATA MOTORS நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள அவ்வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களிடம் முன்அனுமதி பெற்று **29.02.2020** விலை விவரப்பட்டியல் கோரியதை மன்றத்தின் அனுமதிக்கும்.

மேற்படி 19 எண்ணிக்கை வாகனங்களுக்கு 7500 கி.மீ., தூரத்திற்கான மராமத்து பணிகள் செய்ய TATA MOTORS நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற SRI CM MOTORS KARUR மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும் இதற்குண்டான உத்தேச செலவுத் தொகை ரூ.76,000/—யை பொதுநிதியில் செலவினம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான 19 எண்ணிக்கை வாகனங்களுக்கு 7500கி.மீ., தூரத்திற்கான மராமத்து பணிகள் செய்ய TATA MOTORS நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற SRI CM MOTORS KARUR நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும் இதற்குண்டான உத்தேச செலவுத் தொகை ரூ.76,000/—யை பொதுநிதியில் செலவினம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வழங்கலாம்.
2)மேற்படி பொதுசுகாதார பிரிவு வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்பு தொகைக்கு மேல் உள்ள கூடுதல் செலவினத் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/3714/2019)

தீர்மான எண்.2106 அனுமதிக்கப்பட்டது.

25)கரூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு புல் வெட்டும் இயந்திரம் 10 எண்ணம் சப்ளை செய்யும் பணிக்கு 12.03.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், 60/101,ஏ/பி.நெ.6 ஆர்.எஸ்.பில்டிங், குளக்கரை தெரு, காமராஜ் நகர், நாமக்கல் | ஒன்று | ரூ.47208 ஜிஎஸ்டி உட்பட |
| 2. | ஸ்ரீஅத்தனுார் அம்மன் டிரேடர்ஸ், 1/34, காளப்பநாயக்கன் பட்டி, சேந்தமங்கலம், நாமக்கல் | ஒன்று | ரூ.48160 ஜிஎஸ்டி உட்பட |

அ.கு
1)மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம். (எச்1/831/2020)

தீர்மான எண்.2107 அனுமதிக்கப்பட்டது.

26)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 1 முதல் 48 வார்டுகளிலும் உள்ள தெருக்களின் ஓரங்களிலும், கழிவு நீர் கால்வாய்களின் ஓரங்களிலும், காலி இடங்களிலும், சலைகளின் ஓரங்களிலும் அடிக்கடி செடிகள் வளர்ந்து புதர்போல் ஆகி எலிகள் மற்றும் பூச்சிபுழுக்கள் உற்பத்தியாக ஏதுவாக அமைந்து விடுகின்றன. அவ்வாறு வளரும் செடி புதர்களை துப்புரவு பணியாளர்கள் மூலம் சுத்தம் செய்து வெட்டி அப்புறப்படுத்த காலதாமதம் ஏற்படுகிறது. மேலும் அனைத்து பகுதிகளிலும் விரைவாக செடி புதர்களை வெட்டி சுத்தம் செய்ய இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே அவ்வாறு வளர்ந்து உள்ள செடிகொடிகளை வெட்ட அதற்கான பிரத்யேகமாக உள்ள புல்வெட்டும் இயந்திரங்கள் கொண்டு புல்கள் மற்றும் செடிகொடிகளை வெட்டினால் விரைவாக பணிகள் முடிவடையும் மேலும் துப்புரவு பணியாளர்களின் பணிகள் பாதிக்கப்படாமல் இருக்கும் என்பதால் புல் வெட்டும் இயந்திரங்கள் பொது சுகாதாரப்பிரிவு ஒவ்வொன்றுக்கும் ஒன்று வீதம் 10 எண்ணிக்கைகள் வாங்கி வழங்க சுகாதார ஆய்வாளர்கள் குறிப்பில் தெரிவித்துள்ளார்கள் எனவே அதன் அடிப்படையில் கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வளர்ந்து வரும் புல் மற்றும் செடிகொடிகளை துப்புரவு பணியாளர்களை கொண்டு வெட்டி அப்புரப்படுத்த ஏதுவாக பொது சுகாதாரப்பிரிவு ஒவ்வொன்றுக்கும் ஒன்று வீதம் புல் வெட்டும் இயந்திரங்கள் 10 எண்ணம்

வாங்குவதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்டபணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00லட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம். (2020/எச்1)

தீர்மான எண்.2108 அனுமதிக்கப்பட்டது.

27)கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு சொந்தமான COMPACTOR வாகன எண் TN47 AH 8849– க்கு 1,10,000 கி.மீ தூரத்திற்க்கான அட்டவணை மராமத்து பணிகள் செய்ய EICHER MOTORS அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள அவ்வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று விலை விபரப்பட்டியல் பெற்றதை மன்றத்தின் அனுமதிக்கும்.

மேற்படி COMPACTOR வாகன எண் TN47 AH 8849–க்கு 1,10,000 கி.மீ தூரத்திற்க்கான அட்டவணை மராமத்து பணிகள் செய்ய EICHER MOTORS அங்கீகாரம் பெற்ற Jailaxmi Auto Works & Agencies (P) Ltd Karur நிறுவனம் மேற்படி பணிக்கு ரூ.49,819/– விலை விபரப்பட்டியல் வழங்கியுள்ளது.

மேற்படி பட்டியலில் உள்ளபடி மேற்படி பணிக்கு சந்தை நிலவரப்படி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள EICHER MOTORS அங்கீகாரம் பெற்ற Jailaxmi Auto Works & Agencies (P) Ltd Karur நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும் இதற்குண்டான உத்தேச செலவுத்தொகை ரூ.49,819–யை பொதுநிதியில் செலவினம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :
1)பொதுசுகாதாரப்பிரிவு COMPACTOR வாகன எண் TN47 AH 8849– க்கு 1,10,000 கி.மீ தூரத்திற்க்கான அட்டவணை மராமத்து பணிகள் செய்ய EICHER MOTORS அங்கீகாரம் பெற்ற Jailaxmi Auto Works & Agencies (P) Ltd Karur நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும் இதற்குண்டான உத்தேச செலவுத்தொகை ரூ.49,819–யை பொதுநிதியில் செலவினம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.
2)மேற்படி பொதுசுகாதார பிரிவு வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்பு தொகைக்கு மேல் உள்ள கூடுதல் செலவினத்தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (3222/2019/எச்5)

தீர்மான எண்.2109 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
கரூர் நகராட்சி